[2006 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. திருவாளர்கள் ஆக்ஷன்-எய்டு இண்டர்நேஷனல் இந்தியா, சென்னை என்ற நிறுவனம், அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அந்த நிறுவனத்திற்கு விற்பனை செய்த குடும்பப் பயனுக்கான பொருட்கள் அடங்கிய சிப்பங்களுக்கு மறுவிற்பனை வரியைப் பொறுத்தவரையில் விலக்கு அளித்தது குறித்து வணிக வரித் துறையின் 8–9–2005 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. வணிக வரித் துறையில் உருவாகி, அதன் பின்னர் திருத்தப்பட்டவாறான 30–11–2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/வ.வ./892 (e-4) 2001 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் மற்றும் வணிக வரித் துறையில் 30.11.2001 ஆம் நாளன்று உருவாகி 30–11–2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் III - பிரிவு 1 (a) ல் வெளியிடப்பட்ட SRO A 72 (a-2) / 2001 ஆம் எண் கொண்ட முந்தைய அறிவிக்கையினை இரத்து செய்தும், வணிக வரி உதவி ஆணையாளர், வணிக வரி துணை ஆணையாளர்

2006 ஜனவரி 27]

ஆகியோரை உள்ளாட்சிப் பகுதிக்கான மேல்முறையீட்டு அதிகாரிகளாக நியமித்தது குறித்து வணிக வரித் துறையின் 2–1–2006 ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் பொருட்களை கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001)14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. வணிகவரி–அறநிலையத் துறையில் உருவாகி, அதன் பின்னர் திருத்தப்பட்டவாறான 20-2-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/ வ.வ.அ.நி./996 (n-1)/90 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் மற்றும் வணிகவரி–அறநிலையத் துறையில் உருவாகி, 20–2–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/வ.வ.அ.நி./ 996 (n-2)/90 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் வணிக வரித் (சி2) துறையின் 2–1–2006 ஆம் நாளிட்ட 3 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவு மீதான வரிச் சட்டம் 18 (4) (தமிழ்நாடு சட்டம் 13/1990) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. (i) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் திருத்தம் செய்தும் (ii) ஐந்தாம அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிமெண்ட் விற்பனை மீது செலுத்த வேண்டிய மேல்வரியினை விலக்களித்தும் மற்றும் (iii) ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுளள சிமெண்ட் விற்பனை மீது செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்தும் வணிக வரித் துறையின் 2–1–2006 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. 17–3–1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II பிரிவு I-ல் வெளியிடப்பட்ட 17–3–1986 ஆம் நாளிட்ட – II (1) / வணிக வரி மற்றும் அறநிலையத் துறை / 47 (இ) /86 ஆம் எண்ணுள்ள வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் அறிவிக்கையின்படி வானொலிப் பெட்டி பாகங்களின் விற்பனைக்காக

[2006 ஜனவரி 27

வணிகர்களால் வசூலித்த வரி மேம்பாட்டுத் தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 24–10–2005 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

64. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு விதிகள் இயற்றியது குறித்து 29–12–1999 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (AB-2) துறையின் 528 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1969 ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு சட்டம் (மத்திய சட்டம் 18/1969) 30 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

65. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகள் இயற்றியது குறித்து 7–10–2005 ஆம் நாளிட்ட பொதுத் (நிருவாகம்-1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 989 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 22/2005) 29 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

66. 2004–2005 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

67. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

68. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

69. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2006 ஜனவரி 27]

70. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–A *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

71. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் முப்பத்து ஒன்றாம் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–A *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

72. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–A *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

73. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்திய சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

74. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

75. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2004–2005 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

76. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2004–2005 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. 2004–2005 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை.